**அனுப்புநர்**

சா.சேதுராமவர்மா,
அரசுத் தேர்வுகள் இயக்குநர்,
**சென்னை** - 600 006.

**பெறுநர்**

1. அனைத்து மேல்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர்கள், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி (முதன்மைக் கல்வி அலுவலர் மற்றும் இணை இயக்குநர் (கல்வி), புதுச்சேரி வாயிலாக)
2. அனைத்து மாவட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநர்கள்.

**ந.க.எண்**023720 /**எச்**.1/2023 **நாள்** : 08.05.2023

**ஐயா/அம்மையீர்,**

**பொருள்** : சென்னை-6, அரசுத் தேர்வுகள் இயக்ககம் - மேல்நிலை பொதுத் தேர்வு மார்ச்/ஏப்ரல் 2023 - விடைத்தாளின் நகல் / மறுகூட்டலுக்கு விண்ணப்பித்தல் – பள்ளி மாணவர்கள் தாம் பயின்ற பள்ளிகள் மூலமாகவும் தனித்தேர்வர்கள் தாங்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் மூலமாகவும் ஆன்-லைனில் விண்ணப்பித்தல் – பள்ளித் தலைமை ஆசிரியர்கள் உரிய நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தல் –தொடர்பாக.

**பார்வை:** இவ்வலுவலக இதே தேதியிட்ட செய்திக் குறிப்பு.

-----

, மார்ச்/ஏப்ரல் 2023 மேல்நிலை இரண்டாம் ஆண்டு பொதுத் தேர்வெழுதிய தேர்வர்களின் தேர்வு முடிவுகள் 08.05.2023 அன்று வெளியிடப்பட்டுள்ளது.

இதனைத் தொடர்ந்து, தங்கள் பள்ளி மாணாக்கர் மற்றும் தங்கள் தேர்வு மையத்தில் தனித்தேர்வர்களாகத் தேர்வெழுதியோர் விடைத்தாள் நகல் கோரியோ அல்லது மதிப்பெண் மறுகூட்டல் கோரியோ விண்ணப்பிக்க விரும்பினால், 09.05.2023 ( **செவ்வாய்கிழமை**) **காலை 11.00 மணி முதல்** 13.05.2022 (**சனிக்கிழமை**) **மாலை 5.00 மணி வரை** விண்ணப்பிக்க கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

விண்ணப்பங்களைப் பதிவு செய்ய விரும்பும் பள்ளி மாணாக்கர், தாங்கள் பயின்ற பள்ளி வழியாகவும், தனித்தேர்வர்கள், அவர்கள் தேர்வெழுதிய தேர்வு மையங்கள் வாயிலாகவும் விண்ணப்பிகலாம் என இவ்வியக்ககத்திலிருந்து

-2-

வெளியிடப்பட்ட செய்திக் குறிப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது. எனவே, பள்ளி மாணவர்கள் / தனித்தேர்வர்கள் விண்ணப்பங்களைப் பதிவு செய்யத் தங்களது பள்ளியை அணுகையில், தாங்கள் அதற்கேற்ப தகுந்த ஏற்பாடுகளைத் தயாராக செய்து வைத்திருத்தல் வேண்டும்.

ஒவ்வொரு பள்ளிக்கும் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ள User ID, Password-ஐ பயன்படுத்தியும், கீழ்க்குறிப்பிட்டுள்ள அறிவுரைகளைப் பின்பற்றியும் மேற்குறிப்பிட்டுள்ள நாட்களில் விண்ணப்பங்களை ஆன்-லைனில் பதிவேற்றம் செய்திட அனைத்துப் பள்ளித் தலைமை ஆசிரியர்களும் உரிய நடவடிக்கையினை மேற்கொள்ள வேண்டும்.

| | |
|---|---|
| 01 | மாணவர்கள் விடைத்தாள் நகல் கோரியோ அல்லது மதிப்பெண் மறுகூட்டல் கோரியோ விண்ணப்பிக்க வரும்பொழுது, விடைத்தாள் நகல் அல்லது மறுகூட்டல் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றிற்கு மட்டுமே விண்ணப்பிக்க இயலும் எனத் தெரிவித்து, அன்னாரிடம் ஒரு படிவத்தை அளிக்க வேண்டும். அதில், எந்தெந்தப் பாடங்களுக்கு விடைத்தாளின் நகல் தேவை? எந்தெந்த பாடங்களுக்கு மறுகூட்டல் மட்டும் தேவை? போன்ற விவரங்களை மாணவர்கள் பூர்த்தி செய்ய அறிவுறுத்தி அப்படிவத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டும். |
| 02 | www.dge.tn.gov.in என்ற இணையதளத்திற்குச் சென்று "click to access to online portal" என்ற வாசகத்தினை click செய்து திரையில் தோன்றும் "HSE Examination March/ April 2023 - Scan / RT-1 application for Registration" என்ற தலைப்பினை click செய்து USER-ID மற்றும் Password-ஐ பயன்படுத்தி, பின்னர், HSE SECOND YEAR 2023 SCAN COPY / RT1 APPLICATION (OR) HSE FIRST YEAR (ARREAR) 2023 SCAN COPY / RT1 APPLICATION என்பதை click செய்து, திரையில் தோன்றும் விண்ணப்பப் படிவத்தினை பதிவிறக்கம் செய்து தேவைப்படும் நகல்களை எடுத்துக் கொள்ளவேண்டும். மேலும் தேர்வர்களுக்கான அறிவுரைகளையும் பதிவிறக்கம் செய்து தேர்வர்களுக்கு வழங்கவேண்டும். |

| | |
|---|---|
| 03 | விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்குரிய தொகையினைப் பணமாகப் பெற்றுக் கொள்ள வேண்டும்.<br>**<u>விடைத்தாளின் நகல் (Copy of the answer sheet)- கட்டணம்</u>**<br>பாடம் ஒவ்வொன்றிற்கும் - ரூ. 275/-<br>**<u>மறுகூட்டல் (Re-totalling) கட்டணம்:</u>**<br>உயிரியல் பாடம் மட்டும் - ரூ.305/-<br>ஏனையப் பாடங்கள் (ஒவ்வொன்றிற்கும்) - ரூ.205/- |
| 04 | விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்கும் பாடங்களுக்கு தற்போது மறுகூட்டலோ (அல்லது) மறுமதிப்பீட்டிற்கோ விண்ணப்பிக்க இயலாது. |
| 05 | விடைத்தாள் நகல் பெற்ற பின்னரே மதிப்பெண் மறுகூட்டலுக்கு (RT-II) / மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிக்க வாய்ப்பு வழங்கப்படும். |
| 06 | விடைத்தாள் நகல் தேவையில்லையெனில், மாணவர் விரும்பினால் மறுகூட்டலுக்கு (RT-I) தற்போது விண்ணப்பிக்கலாம். இவ்விவரங்களை மாணவர்களுக்கு மிகத் தெளிவாக எடுத்துரைக்கவேண்டும். |
| 07 | விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டல் கோரி பள்ளிகள் / தேர்வு மையங்களில் விண்ணப்பிக்கும் மாணாக்கர் அதன்பிறகு விடைத்தாள் நகல் பதிவிறக்கம் செய்வது, மறுமதிப்பீட்டிற்கு விண்ணப்பிப்பது தொடர்பான விவரங்களை அரசுத் தேர்வுத்துறையால் வெளியிடப்படும் செய்திக்குறிப்பின் மூலமே அறிந்து செயல்பட வேண்டும். **எக்காரணம் கொண்டும் பள்ளிகள் / தேர்வுமையங்களை அணுக வேண்டாம் என்பதை விண்ணப்பிக்கும் மாணாக்கர் / பெற்றோர்களுக்கு அறிவுறுத்த வேண்டும்.** |
| 08 | மாணவர்களிடமிருந்து பூர்த்தி செய்த படிவத்தையும், கட்டணத் தொகையினையும் பெற்றவுடன், இணையதளத்தில் அவ்விவரங்களை பதிவேற்றம் செய்யவேண்டும். |

| | |
|---|---|
| 09 | எந்தெந்த பாடங்களுக்கு மாணவர்கள் விடைத்தாள் நகல் கோரி விண்ணப்பிக்கிறார்கள் மற்றும் எந்தெந்த பாடங்களுக்கு மதிப்பெண் மறுகூட்டல் கோரி விண்ணப்பிக்கிறார்கள் என்ற விவரங்களை இணையதளத்தில் பதிவு செய்தவுடன் மாணவர் அளித்த விண்ணப்பப் படிவத்தோடு அவ்விவரங்களை மீண்டும் சரிபார்த்து உறுதி செய்து கொள்ள வேண்டும். உறுதிசெய்த பின்னரே Submit கொடுக்க வேண்டும். Submit செய்தவுடன் விண்ணப்ப எண், பதிவெண், விண்ணப்பித்த பாடங்கள்,செலுத்த வேண்டிய தொகை ஆகியவை குறிப்பிட்ட ஒப்புகைச்சீட்டு (acknowledgement) Print ஆகிவரும். அந்த ஒப்புகைச் சீட்டில் கையொப்பம் மற்றும் பள்ளியின் முத்திரையிட்டு மாணவரிடம் அளிக்கவேண்டும். ஒப்புகைச்சீட்டினை மாணவர் மிக பாதுகாப்பாக வைத்துக் கொள்ள அறிவுறுத்த வேண்டும். ஒப்புகைச் சீட்டில் வழங்கப்பட்டுள்ள விண்ணப்ப எண்ணை (Application Number) பயன்படுத்தியே தேர்வுத் துறையால் பின்னர் அறிவிக்கப்படும் தேதியில் விடைத்தாட்களின் நகல்களை இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ள முடியும். மறுகூட்டல் முடிவுகள் பற்றி அறிய இயலும்.<br>தேர்வர்கள் தமக்கு வேண்டாத பாடத்திற்கு விண்ணப்பம் தவறுதலாக பதிவு செய்யப்பட்டு விட்டதாகவும், அதன்பின் பதியப்படாத வேறு பாடத்திற்கு விடைத்தாள் நகல் வழங்குமாறும் இவ்வியக்கத்தில் வந்து கோரும் நிகழ்வுகள் தங்களது கவனமான செயல்பாடுகள் மூலம் தவிர்க்கப்பட வேண்டும். அவ்வாறான நிகழ்வுகள் நிகழும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட தலைமையாசிரியர்கள் மீது துறை வாரியான நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| 10 | ஒவ்வொரு நாளும் பணி முடிந்தவுடன், daily summary report/daily detailed report இவ்விரண்டையும் click செய்தால் அன்றைய தினம் பதிவு செய்த விவரங்கள் தங்களுக்குக் கிடைக்கும். இந்த அறிக்கையினை பதிவிறக்கம் செய்துகொண்டு, அன்றைய தினம் பதிவுசெய்த விண்ணப்பங்களையும் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டத் தொகையினையும் ஒப்பிட்டு சரிபார்த்துக் கொள்ள வேண்டும். |

11 விண்ணப்பிப்பதற்கு இறுதி நாளான .05.2023 அன்று மாலை மணிக்கு விண்ணப்பிக்கும் நேரம் முடிவடைந்தவுடன், FINAL SUMMARY REPORT/FINAL DETAILED REPORT என்ற பகுதியினை click செய்தால் தங்கள் பள்ளியில் விடைத்தாள் நகல் மற்றும் மறுகூட்டலுக்கு விண்ணப்பித்த மாணவர் விவரங்கள், விண்ணப்பித்த பாடங்கள், பெறப்பட்ட மொத்தத் தொகை ஆகிய விவரங்கள் தெரியவரும். இந்த report-னை இரு நகல்கள் எடுத்து பெறப்பட்ட தொகையினை (+1 Arrear, +2 **தேர்வுக்கான <u>விடைத்தாள் நகல் விண்ணப்ப எண்ணிக்கை , கட்டணத் தொகை, மறுகூட்டல்-I விண்ணப்ப எண்ணிக்கை, கட்டணத் தொகை ஆகியவற்றை தனித்தனியாக பட்டியலிட்டு,</u>** அதனை www.karuvoolam.tn.gov.in இணையதளத்திற்கு சென்று இணைப்பில் காணும் வழிமுறைகளை பின்பற்றி கீழ்க்காண் கணக்கு தலைப்பு மற்றும் துறை விவரங்களை பயன்படுத்தி விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டணம் மற்றும் மறுகூட்டல்-I கட்டணத்தினையும் செலுத்திட வேண்டும்.

| | |
|---|---|
| District | PAO (South) Chennai |
| Department receiving receipts | 04304 Directorate of Government Examinations |
| DDO Name | 41010118 Accounts Officer |
| **கணக்குத் தலைப்பு** | 0202 01 102 AA 22711 - Copying / Scanning<br>0202 01 102 AA 22731 - Retotalling / Revaluation |

மேற்கண்டவாறு தேர்வர்களின் விடைத்தாள் நகல் விண்ணப்பக் கட்டணம் மற்றும் மறுகூட்டல்-I கட்டணத்தொகையினையும் செலுத்திய பிறகு பெறப்படும் Payment Receipt மற்றும் தேர்விற்கு விண்ணப்பித்த தனித்தேர்வர்களின் விண்ணப்பங்கள் ஆகியவற்றினை **15.05.2023-க்குள்** சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரிடம் நேரில் ஒப்படைத்து ஒரு நகலில் சம்பந்தப்பட்ட அரசுத் தேர்வுகள் உதவி இயக்குநரின் ஒப்பம் மற்றும் அலுவலக முத்திரையினை பெற்றுச் செல்ல வேண்டும்.

மேற்கூறிய அறிவுரைகளை மேல்நிலைப் பள்ளித் தலைமை ஆசிரியர்கள் கடைப்பிடித்து, விடைத்தாள் நகல் / மறுகூட்டல் கோரும் தங்கள் பள்ளி / மைய மாணவர்களின் / தனித்தேர்வர்களின் விண்ணப்பங்களை இணையதளத்தில் செம்மையான முறையில் பதிவேற்றம் செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

அனைத்து உதவி இயக்குநர்களும் Payment Receipt மற்றும் விண்ணப்பங்களை ஒப்பிட்டு அதன் அறிக்கையினை 18.05.2023-**க்குள்** துணை இயக்குநர் (பொது) அவர்களின் பெயரிட்ட முகவரிக்கு பதிவஞ்சலில் அனுப்பி வைத்திடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**இணைப்பு : விடைத்தாள் நகல், மறுகூட்டலுக்கான கட்டணங்கள் செலுத்தும் வழிமுறைகள்.**

**ஒம்/-**
**இயக்குநர்**

**நகல்:**

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் & இணை இயக்குநர் (புதுச்சேரி)
2. அனைத்து மாவட்டக் கல்வி அலுவலர்கள்(இடைநிலை மற்றும் தனியார் பள்ளிகள்)
3. எப்1, எப்3 & எச்3 பிரிவுகள் (அலுவலகம்).